**STELLA MARIS COLLEGE (AUTONOMOUS), CHENNAI 600 086**
**(For candidates admitted during the academic year 2019 – 20 & thereafter)**

**SUBJECT CODE: 19TM/FC/KP33**

**B.A / B.Sc./ B.S.W./B.V.A. DEGREE EXAMINATION NOVEMBER 2022**
**FOUNDATION COURSE – TAMIL**
**THIRD SEMESTER**

| | | |
|---|---|---|
| **COURSE** | : | **FOUNDATION – CORE** |
| **PAPER** | : | **KAPPIYAM PURANAM** |
| **TIME** | : | **3 HOURS** **MAX. MARKS: 100** |

பகுதி – அ

அ. அனைத்து வினாக்களுக்கும் விடை தருக. **(10X1=10)**

1. கான வேங்கைக்கீழ் நின்ற காரிகை யார்?
2. அறத்தின் தோற்றத்தை உணர்ந்தாய் என மணிமேகலா தெய்வம் யாரிடம் கூறியது?
3. சீவகனின் பிறப்பு யாருடைய வருத்தத்தை நீக்கியது?
4. எடுத்தது கண்டனர்: இற்றது கேட்டார்- எடுத்தது யார்? இற்றது எது?
5. 'மனைவியார் தாம் படைத்த மதுரம் மிக வாய்த்த கனி'-மனைவியார் யார்? கனி யாது?.
6. 'வரிசையாக ஒட்டகங்களை நடத்திக் கொண்டு வாருங்கள்'- என்று கூறியவர் யார்?
7. மணி நிறத்த எழில் மைந்தன் எனக் குறிப்படப்படுபவர் யார்?
8. கொள்கையில் தவறி கெட்ட இளையவன் யார்?
9. செகமுழுதும் தம்கைக்கு வந்ததென மகிழ்ந்தவர் யார்?
10. 'மீன் சொரிந்த முடி வேய்ந்து ஒளிர் தாய்' – யார்?

ஆ. கோடிட்ட இடங்களை நிரப்புக. **(5X1=5)**

1. கதைக்கருவால் பெயர் பெற்று விளங்கும் காப்பியம் ________ஆகும்.
2. சிலப்பதிகாரத்தின் தொடர்ச்சியாக அமைந்த காப்பியம் __________.
3. திருத்தக்கதேவர் ____________ சமயத்தைச் சார்ந்தவர்.
4. கம்பராமாயணம் அரங்கேற்றப்பட்ட இடம் __________.
5. பெரிய புராணத்துள் இடம் பெற்றுள்ள சருக்கங்கள் ____________ ஆகும்.

இ. பொருத்துக: **(5X1=5)**

| | | |
|---|---|---|
| 1. உமறுப்புலவர் | - | திருத்தக்கதேவர் |
| 2. வீரமாமுனிவர் | - | கம்பர் |
| 3. திருத்தொண்டர் காப்பியம் | - | தேம்பாவணி |
| 4. கம்பராமாயணம் | - | சீறாப்புராணம். |
| 5. சீவகசிந்தாமணி | - | சூ.இன்னாசி |

பகுதி – ஆ

அ. எவையேனும் மூன்றனுக்கு இடஞ்சுட்டிப் பொருள் விளக்கம் தருக. **(3X3=9)**

1. "அறிபிறப்பு உற்றனை அறம்பாடு அறிந்தனை"
2. "இவ்வாறு ஆகிப் பிறப்பதோ
   இதுவோ மன்னர்க்கு இயல் வேந்தே"

3. "நாகமும்,நாகமும் நாண நடந்தான்"
4. "அம் மருங்கு நின்று அயர்வார்: அரும்கனிக்கு அங்கு என் செய்வார்?
5. "செல்வமும் சுருக்கமில்லை
   செய்வதும் சுருக்கமில்லை"

ஆ. எவையேனும் நான்கு வினாக்களுக்கு விரிவான விடை தருக. **(4X9=36)**

1. செங்குட்டுவன் வஞ்சினம் கூறியதைக் காட்சிக் காதை வழி புலப்படுத்துக.
2. மணிமேகலா தெய்வம் கூறியனவற்றைத் தொகுத்துரைக்க.
3. சீவகனின் பிறப்பு பற்றி சீவகசிந்தாமணி கூறுவனவற்றை விவரிக்க.
4. இராமனின் வில்லாற்றலைக் கார்முகப் படலம் எங்ஙனம் எடுத்துரைக்கிறது?
5. பெரிய புராணத்தின் வழி அறியலாகும் காரைக்காலம்மையாரின் பக்திச் சிறப்பை விளக்குக.
6. நபிகள் நாயகம் நதியைக் கடந்த அருட்திறத்தை எழுதுக.

இ. ஏதேனும் ஒன்றனுக்கு விரிவாக விடை தருக. **(1X10=10)**

1. கம்பராமாயணம் பற்றி தொகுத்துரைக்க.
2. சீவக சிந்தாமணி பற்றி விரிவாக எழுதுக.
3. இரட்டைக் காப்பியங்கள் குறித்து ஒரு கட்டுரை வரைக.

## பகுதி - இ

அ. ஏதேனும் ஒன்றனுக்கு விரிவாக விடை தருக. **(1X15=15)**

1. 'வேரில் பழுத்த பலா'- நாவலில் இடம்பெறும் சரவணன் கதைமாந்தர் பண்பினை விவரிக்க.
2. சமுதாயச் சிந்தனைகளின் களமாக வேரில் பழுத்தபலா நாவல் விளங்குமாற்றை விவரிக்க
3. 'வேரில் பழுத்த பலா'- நாவலில் இடம்பெறும் அன்னம் கதைமாந்தர் பண்பினை விவரிக்க.

ஆ. தமிழில் மொழியாக்கம் செய்க. . **(1X10=10)**

Rivers are the wealth of a Nation. Rivers supply good drinking Water. They make the soil fertile and help in food production. They provide water ways as means of communications. Forests grow on the banks of rivers; they help in cooling off great heat during hot summer months.

This is why Indian people consider rivers as sacred. Ganga, Yamuna, Brahmaputra and Mahanadi are North Indian rivers. Narmada and Tapti pass through the middle of India. Godavari, Krishna, Pennar, Cauvery, Thamirabarani and Vaigai are the South Indian rivers.

*******